*பிற்பகல் 1–25*

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2006) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–12–2006) புதன்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*1. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிக் குழுக்கள் அமைப்பு மற்றும் அதற்குக் கடமைகள் பகிர்வு) விதிகள் இயற்றுவது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 12–7–2005 ஆம் நாளிட்ட அரசாணை எண் 102–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*2. மின்னணுப் பொருட்களின் பாகங்களின் விற்பனை மீது வணிகர்கள் செலுத்த வேண்டிய வரித் தொகையினை 17–7–1996 ஆம் நாள் முதல்*

2006 டிசம்பர் 5]

*16–9–1996* ஆம் நாள் வரையிலான கால அளவிற்கு தள்ளுபடி செய்துள்ளது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் *20–7–2006* ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் *90*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*3*. ஏதேனும் வணிகர், சங்குகள் விற்பனைமீது செலுத்த வேண்டிய *1* சதவீத வரி வேறுபாட்டுத் தொகை (ஐந்து சதவீதம் வரி மற்றும் நான்கு சதவீதம் வரி இடையிலான வேறுபாட்டுத் தொகை) மற்றும் மேல்வரியினை *1982* முதல் *1984* வரையிலான கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் *26–7–2006* ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் *96*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* மற்றும் *1971* ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம் (தமிழ்நாடு சட்டம் *24/1971*) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*4*. திருவாளர்கள் மேப்ஸ் அண்ட் ஏஜென்சீஸ், திருவாளர்கள் ஸ்கூல் நீட்ஸ், திருவாளர்கள் ஜெய்சங்கர் அண்ட் கம்பெனி மற்றும் திருவாளர்கள் குளோபல் ஏஜென்சீஸ் ஆகியோர் *18–7–1986* முதல் *5-5-1991* வரையிலான கால அளவிற்கு விற்பனை செய்துள்ள வரைபடங்களுக்கு செலுத்தத்தக்க வரித் தொகையை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் *26–7–2006* ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் *97*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*5*. வேலூர், திருவாளர்கள் வாசுதேவ முதலியார் அண்டு சன்ஸ் வறுகடலை விற்பனை செய்ததின்மீது செலுத்தத்தக்க வரி மற்றும் மேல்வரியை *1995–1996* ஆம் ஆண்டுக் கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் *23–8–2006* ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் *123*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* மற்றும் *1971* ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம் (தமிழ்நாடு சட்டம் *24/1971*) *7(3)* ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*6*. சென்னை, பழவந்தாங்கல், எண் *72*, காந்தி சாலை என்ற முகவரியிலுள்ள திருவாளர் வி. சீனிவாசன், *1993–1994* ஆம் ஆண்டிலிருந்து

1997–1998 ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விற்பனை செய்த மீண்டும் வலுவூட்டப்பட்ட சிமிட்டிக் கற்கலவைத் தொட்டியின் மீது செலுத்தத்தக்க 8 சதவீதம் முதல் 12 சதவீதத்திற்கும் மற்றும் 11 சதவீதம் முதல் 16 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வரி மற்றும் மேல்வரி வகையிலான வேறுபாட்டுத் தொகையினை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 4–9–2006 ஆம் நாளிட்ட அரசாணை எண் 134–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 1921 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகர வாடகைக்கு குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டத்தின் வழிவகையினை மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், விரகனூர் கிராமத்திற்கும் விரிவுபடுத்தும் அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும் வகையில் வருவாய்த் துறையின் 28–8–2006 ஆம் நாளிட்ட அரசாணை எண் 556–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1921 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகர வாடகைக்கு குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/1922) 1 (6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. 2005–2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2006).

2. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2006).